கொடுக்கிறார்களா, அல்லது நம்முடைய அரசாங்கத்தின் பொறுப்பில் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது.

திருமதி த. ந. அனந்தநாயகி : தேசிய நெடுஞ்சாலையின் குறுக்கே பைப் போடுவதற்குக் கூட மத்திய அரசாங்கத்திலிருந்து அனுமதி வாங்கவேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படுகிறது. ஆகையால், இதைப் பற்றி குறிப்பாக கனம் அமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் செல்லும்போது, சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் கலந்து பேசி உரிமை பெற்று வருவார்களா? இதெல்லாம் சாதாரண நிர்வாகச் சிக்கல்கள் தான். இதையெல்லாம் தீர்த்துக் கொள்வதற்கு அதிகக் கஷ்டம் இருக்காது. ஆகவே, அவர்களே இதிலே கவனம் செலுத்தி இப்படிப்பட்ட காலதாமதம் இல்லாமல் செய்வதற்கு ஒரு வழிவகை செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : சாதாரண நிர்வாகச் சிக்கலுக்கே இவ்வளவு காலதாமதம் ஆகிறது. பலமுறை எழுதி இருக்கிறோம். மீண்டும் மத்திய அரசுக்கு எழுதி வற்புறுத்துகிறோம்.

திரு. கே. டி. கே. தங்கமணி : தலைவரவர்களே, மத்திய அரசாங்கத்தின் நிதியைப் பெற்றுத்தான் இந்தத் தலைமைப் பொறியாளர் நியமிக்கப்பட்டிருக்கிற காரணத்தால், இதற்கு ஏதாவது ஒரு "கோட்" வகுப்பதற்கு மத்திய அரசாங்கத்தோடு பேசி ஏற்பாடு செய்து கொள்ள அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தேசிய நெடுஞ்சாலைப் பணிகளை கவனிப்பதற்காகத்தான் இவர் நியமிக்கப்பட்டிருக்கிறார். மத்திய அரசாங்கத்திடமிருந்து அதிகாரங்களைப் பெறுவதற்கு அல்ல.

சின்னக்கரைக்கு அருகே குட்டை அமைப்பு

*726 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர்–பல்லடம் ரோட்டில் சின்னக்கரைக்கு அருகில் ஒரு குட்டை அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

1972 மார்ச் 27]

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) ஆம்.

(இ) பல்லடம் தாலூகா, திருப்பூர் ஊராட்சி ஒன்றியத்தில் கரைப்புதூர் கிராமம் நில அளவை எண். 214-ல் சின்னக்கரை என்ற ஓடையின் குறுக்கே திருப்பூர்-பல்லடம் ரோடுக்கு மேல்புரத்தில் ஒரு குட்டை அமைக்கும் திட்டம் பாசன தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் உள்ளது.

சிவன்மலைக் கவுண்டன் பாளையத்துக்குப் பாசனக்குளம்

*727 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் ஊராட்சி ஒன்றியம், முத்தனம்பாளையம் கிராமம் சிவன்மலைக் கவுண்டன் பாளையத்தில் ஒரு குளம் (Irrigation Tank) அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

பல்லடம் பகுதியில் உள்ள வறட்சிப் பகுதிகள்

*728 வினா—திரு. கே. என். குமாரசாமி : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் பகுதி வறட்சி பகுதியாக இருப்பதால் அப்பகுதியில் உள்ள குட்டைகளுக்கு P.A.P. வாய்க்காலிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து நிரப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(இ) ஆம் எனில், எப்பொழுது?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக்ப ாட்சா : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.